பிற்பகல் 12—20

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2002-2003 - வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002-2003 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவை விதி 190-ல் உள்ளவாறு 28-10-2002, திங்கட்கிழமை, மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-10-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) விதிகள் இயற்றியது குறித்து வணிக வரிகள் துறையின் 27-06-2002 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

31. தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயத்தின் துணைத் தலைவர் திரு. ஏ. பால்ராஜ், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டது குறித்து வணிக வரிகள் துறையின் 16-06-2002 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

2002 அக்டோபர் 25]

32. 01-07-2002 ஆம் நாளை 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர பொருட்கள் மீதான வரி (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/2002) செயலுக்கு வரும் நாளாக அறிவிக்கப்பட்டது குறித்தும் மற்றும் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து சில வகை நபர்களுக்கு விலக்களிப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 27-06-2002 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

33. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 28-05-1996 ஆம் நாளிட்ட 67 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

34. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை, ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

35. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1996 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

36. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

37. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

15. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

16. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

17. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

18. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

19. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

****

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT

PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.